# சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

அமர்வு வழக்கு எண் 56/2025

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | ~~9 (LW- )~~ PW10 | நாள் | 12.11.2025 |
| பெயர் | விக்னேஷ் | வயது | 19 |
| தந்தை பெயர் | ரமேஷ் | தொழில் | Welding, Painting |
| கிராமம் | முட்டம் வடக்கு தெரு | தாலுக்கா | மயிலாடுதுறை |

(குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் ஆஜர். 2, 3 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் ஆஜரில்லை. குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

நான் முட்டம் வடக்கு தெருவில் வசித்து வருகிறேன். நான் வெல்டிங் மற்றும் பெயின்டிங் வேலை செய்து வருகிறேன். இறந்துபோன ஹரிஸ் மற்றும் ஹரிசக்தியை தெரியும். அவர்கள் எதிரிகள் தங்கதுரை, மூவேந்தன், ராஜ்குமார் ஆகியோர் வெட்டியதால் கொலையுண்டு இறந்து போனார்கள். ஆஜர் எதிரிகளை தெரியும். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு எதிரி ராஜ்குமாரும், எதிரி முனுசாமியின் மகள் மஞ்சுளாவும் காதலித்து திருமணம் செய்து கொண்டு திருப்பூர் சென்றுவிட்டார்கள். அதற்கு தெருவே எதிர்ப்பு தெரிவித்தது. மீண்டும் ராஜ்குமார் குடும்பமும் முனுசாமி குடும்பமும் ராசியாகிவிட்டது. எங்கள் குடும்பத்தையும் ஹரிஸ் குடும்பத்தையும் மேற்கண்ட இரு நபர்கள் ஜாடை மாடையாக பேசிவந்தார்கள். மூவேந்தன் வீட்டு வாசலில் என் அண்ணன் தினேஷ் கேக் வெட்டியதாக பொய்யான தகவலை மூவேந்தன் கரிகாலனிடம் சொல்லியதால் கரிகாலன் என் அண்ணனை கண்டித்தார். அது சம்பந்தமாக என் அம்மா கலைவாணியிடம் என் அண்ணன் சொல்லி வருத்தப்பட்டார். 13.02.2025 அன்று மாலை சுமார் 4.30 மணியளவில்

V.Vighesh

மூவேந்தன் என் அண்ணன் தினேஷ் கண்ணத்தில் அடித்ததாக என் அப்பா எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார். 14.02.2025 அன்று மதியம் சுமார் 2.30 மணியளவில் இது குறித்து நான் ராஜ்குமாரிடம் போன் மூலமாக கேட்டபோது அப்படிதான் அடிப்பேன் குறுக்கே யார் வந்தாலும் அவர்களை குத்துவேன் என்று சொன்னார். அன்றைய தினம் இரவு 8.30 மணியளவில் எங்கள் தெருவின் முக்கூட்டு பம்படியில் ஹரிஷ், ஹரிசக்தி, தினேஷ், அஜய் ஆகியோர் செல்போன் பார்த்துக்கொண்டிருந்தபோது அங்கு வந்த தங்கதுரை, ராஜ்குமார், மூவேந்தன் ஆகியோர் கத்தியை கொண்டு என் அண்ணன் தினேஷை குத்த வரும்போது அதை தடுத்த ஹரிசக்தியை இடது பக்க பட்டக்ஸில் தங்கதுரை கத்தியால் குத்தினார் அதை தடுக்க போன ஹரிஷை இடது பக்க விலா பகுதியில் மூவேந்தன் கத்தியால் குத்தி குடல் சரிந்ததாக என் அப்பா எனக்கு போனில் சொன்னார். கேள்விப்பட்டவுடன் நான் ஊருக்கு வந்தேன். பிறகு செம்பனார் கோவில் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார் நான் கேள்விப்பட்டதை சொன்னேன்.

குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

V. Vignesh

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சுருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

12/11/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

# சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

அமர்வு வழக்கு எண் 56/2025

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 11 (LW- 18) | நாள் | 12.11.2025 |
| பெயர் | ஜெகதீஷ் | தொழில் | மெக்கானிக் |
| தந்தை பெயர் | சிவாஜி | கிராமம் | முட்டம் வடக்குதெரு |
| தாலுக்கா | முட்டம், மயிலாடுதுறை | வயது | 24 |

(குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

நான் முட்டம் வடக்கு தெருவில் வசித்து வருகிறேன். மெக்கானிக்காக வேலை செய்து வருகிறேன். இறந்து போன ஹரிஷ் மற்றும் ஹரிசக்தியை தெரியும். அசா 10 ஐ தெரியும். ஹரிஷ் மற்றும் ஹரிசக்தியை மூவேந்தன், தங்கதுரை மற்றும் ராஜ்குமார் ஆகியோர் கொலை செய்துவிட்டார்கள். இன்று ஆஜரான எதிரிகளை சாட்சி கை நீட்டி அடையாளம் காட்டினார். எங்கள் ஊரை சேர்ந்த மஞ்சுளா என்பவரை ராஜ்குமார் என்பவர் காதலித்து திருமணம் செய்து கொண்டு திருப்பூர் சென்றுவிட்டார்கள். அதில் எதிரி மூவேந்தன் எதிரி ராஜ்குமாருக்கு எதிர்ப்பாக இருந்தார். தெருப்பசங்க மூவேந்தனுக்கு ஆதரவாக இருந்தார்கள். அசா 10 விக்னேஷின் அண்ணன் தினேஷ் தெருவில் ஊளைவிட்டு சென்றான் அப்போது மஞ்சுளா இருடா என் மகன்கள் வரட்டும் என்று தினேஷிடம் 13.02.2025 அன்று மாலை சுமார் 4 மணியளவில் சண்டை வளர்த்தார். பிறகு 14.02.2025 அன்று இரவு சுமார் 8-8.30 மணியளவில் ஹரிஷ் மற்றும் ஹரிசக்தி, தினேஷ், விக்னேஷ் ஆகியோர் தெருவில் இருப்பார்கள் அப்போது தெரு முக்கூட்டில்

S.ஜெகதீஷ்

தங்கதுரை, ராஜ்குமார், மூவேந்தன் ஆகியோர் தினஷிடம் சண்டை போட்டார்கள். அப்போது ஹரிஷ் மற்றும் ஹரிசக்தி எப்படி என் மச்சானிடம் சண்டை போட்டார்கள் என்று கேட்டபோது ஹரிஷ், ஹரிசக்தியை ராஜ்குமார், தங்கதுரை, மூவேந்தன் ஆகியோர் கத்தியால் குத்திவிட்டார்கள். மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் பிணவறை முன்பு போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் நடந்ததையும் கேள்விப்பட்டதையும் சொன்னேன்.

**1 முதல் 5 குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பில் குறுக்கு விசாரணை**

ஹரிஷ் மற்றும் ஹரிசக்தியை கத்தியால் குத்தியதை நான் நேரில் பார்க்கவில்லை. என் அம்மா சொல்லிதான் எனக்கு தெரியும். நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**6ம் குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

12/11/21

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

## சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

அமர்வு வழக்கு எண் 56/2025

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 12 (LW-16 ) | நாள் | 12.11.2025 |
| பெயர் | குமரேசன் | தொழில் | கொத்தனார் |
| தந்தை பெயர் | ராஜா | கிராமம் | முட்டம் வடக்கு தெரு |
| தாலுக்கா | மயிலாடுதுறை | வயது | 30 |

(குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

நான் முட்டம் வடக்கு தெருவில் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்கிறேன். இறந்து போன ஹரிஷ் மற்றும் ஹரிசக்தியை தெரியும். அவர்கள் கொலையுண்டு இறந்துபோனார்கள். மூவேந்தன், ராஜ்குமார், தங்கதுரை ஆகியோர் ஹரிஷ் மற்றும் ஹரிசக்தியை கொலை செய்துவிட்டார்கள். சாட்சி ஆஜர் எதிரிகளின் ஒவ்வாருடைய பெயரையும் சொல்லி அடையாளம் காட்டினார். கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ராஜ்குமார் காயத்திரியை காதல் திருமணம் செய்து திருப்பூருக்கு அழைத்து சென்று விட்டார். அதனால் ராஜ்குமார் குடும்த்திற்கும் முனுசாமி குடும்பத்திற்கும் பிரச்சனை நடந்தது. சில நாட்கள் கழித்து இரண்டு குடும்பமும் ராசியாகிவிட்டார்கள். பிறகு தங்கதுரை, ராஜ்குமார், மூவேந்தன் ஆகியோர் தெருவில் சிறு சிறு சண்டைகள் போட்டு வந்தார்கள். 13.02.2025 அன்று தினேஷை பார்த்து மாலை 4.30 மணியளவில் மூவேந்தன் கண்ணத்தில் அறைந்து விட்டார். பிறகு 14.02.2025 அன்று மஞ்சுளா, தினேஷை பார்த்து ஏன்டா என் மகனை பார்த்து ஊளையிட்டாய் என்று கேட்டார். பிறகு இரவு சுமார் 8-

குமரேசன்

8.30 மணியளவில் தெருமுக்கூட்டில் ஹரிஷ், ஹரிசக்தி, தினேஷ் ஆகியோர் இருந்தபோது ராஜ்குமார், தங்கதுரை, மூவேந்தன் ஆகியோர் அப்போது ஆளுக்கொரு கையில் கத்தியுடன் வந்து ஹரிஷை இடது பக்க வயிறில் கத்தியால் குத்தி குடல் வெளியே வந்துவிட்டது. ஹரிசக்தியை இடது பக்க பட்டக்ஸில் கத்தியால் குத்திவிட்டார். அஜய் கையில் வெட்டுக்காயம் ஏற்பட்டது. ஹரிஷ் மற்றும் ஹரிசக்தியை மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் அங்கு அவர்கள் இறந்துவிட்டதாக சொன்னார்கள். நானும் அவர்களை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. நான் வேலை முடித்து வீடு திரும்பியபோது ஹரிஷ் மற்றும் ஹரிசக்தி சரிந்து கிடந்ததை பார்த்து மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். போலிசார் என்னை விசாரித்தார்கள் நான் கேள்விப்பட்டதையும் பார்த்ததையும் சொன்னேன்.

**1 முதல் 5 குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்த பிறகு தான் நான் சம்பவ இடத்திற்கு சென்றேன் பிறகு தான் ஹரிஷ் மற்றும் ஹரிசக்தியை பார்த்தேன். அவர்களை நான் தான் மருத்துவமனைக்கு கொண்டு சென்றேன். நான் ஹரிஷை அழைத்து கொண்டு இருசக்கர வாகனத்தில் பின்னால் உட்கார்ந்து பிடித்து கொண்டு சென்றேன். வாகனத்தை ஓட்டியவர் ஜெகதீஷ். நான் இந்த வழக்கிற்காக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6ம் குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை. A ஜெகநாதன்

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

12/11/15

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

## சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

அமர்வு வழக்கு எண் 56/2025

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 13 (LW- 30) | நாள் | 12.11.2025 |
| பெயர் | சரஸ்வதி | தொழில் | WGrI 538 (Police) |
| தந்தை பெயர் | தியாகராஜன் | கிராமம் | - [illegible] |
| தாலுக்கா | நன்னிலம் | வயது | - 34 |

(குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தற்போது சீர்காழி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் முதல் நிலை பெண் காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த பிப்ரவரி மாதம் பெரம்பூர் காவல் நிலையத்தில் முதல் நிலை பெண்காவலராக பணியிலிருந்தபோது 15.02.2025 அன்று பெரம்பூர் காவல் நிலைய குற்ற எண். 57/2025, ச/பி. 296(b),118(1),109,103, 351(3) BNS ன் கீழ் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின் அசலை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவரிடம் 15.02.2025 அன்று காலை 6.00 மணியளவில் ஒப்படைத்தேன். பின்பு நிலையம் வந்து ஆய்வாளரிடம் அறிக்கை செய்தேன். அவர் என்னை விசாரித்தார்.

1 முதல் 6 குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

சரஸ்வதி 538.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

12/11/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

## சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

அமர்வு வழக்கு எண் 56/2025

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 14 (LW- 31) | நாள் | 12.11.2025 |
| பெயர் | நவீன்ராஜ் | தொழில் | காவல் துறை |
| தந்தை பெயர் | T. சாந்தகுமார் | கிராமம் | கடமங்குடி |
| தாலுக்கா | சீர்காழி | வயது | 32 |

(குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தற்போது பூம்புகார் காவல் நிலையத்தில் காவலராக வேலை செய்கிறேன். கடந்த பிப்ரவரி மாதம் பெரம்பூர் காவல் நிலையத்தில் காவலராக பணியிலிருந்தபோது செம்பனார்கோவில் காவல் ஆய்வாளர் என்னை பெரம்பூர் காவல் நிலைய குற்ற எண். 57/2025 வழக்கில் சம்பந்தப்பட்ட சக்தி என்ற ஹரிசக்தி என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டுகோள் கடிதம் கொடுத்தார் கடிதத்தை பெற்றுக்கொண்ட நான் 15.02.2025 அன்று காலை 9.15 மணியளவில் செம்பனார்கோவில் ஆய்வளருடன் நான் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சென்றேன். சவக்கிடங்கு முன்பு ஹரிசக்தி பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டுகோள் கடித்ததை மருத்துவமனை அலுவலகத்தில் ஒப்படைத்து அன்று பிரேத பரிசோதனை எண். 33/2025 எண் பெற்று பிறகு பிரேத பரிசோதனை செய்ய பிரேதத்தை மருத்துவர் வசம் ஒப்படைத்தேன். டாக்டர் நவீன், டாக்டர் வினோத்குமார், டாக்டர் தமிழ்குமரன் ஆகிய மூவரும் ஹரிசக்தி பிரேத்தை காலை 11.50 மணிக்கு தொடங்கி 12.50 மணிக்கு பிரேத பரிசோதனையை

S. Naveenraj PC 628

முடித்து பிரேத்தை பெற்று இறந்தவரின் உறவினர் வசம் ஒப்படைத்தேன். பின்னர் பிரேத்திலிருந்து இரத்தக்கறை படிந்த உடைகளை என்னிடம் ஒப்படைத்து அதை நான் தனியறிக்கை மூலம் நிலையத்தில் ஒப்படைத்தேன். பின்பு அதே வழக்கில் கொலையுண்டு இறந்த ஹரிஷ் மற்றும் ஹரிசக்தி ஆகியோரின் இரத்தகரை படிந்த உடைகளை தரங்கம்பாடி குற்றவியல் நீதித்துறை நடுவர் வசம் 25.02.2025 அன்று ஒப்படைத்து சி.பி. எண். 21/2025 முதல் 26/2025 வரை பெற்றேன். உடல் உள்ளுறுப்புகளை நீதிமன்ற உத்தரவுபடி 06.03.2025 அன்று தஞ்சாவூர் ரசாயன பகுப்பாய்வு கூடத்தில் ஒப்படைத்து ஒப்புகை பெற்று அதை நிலையம் வந்து அறிக்கை செய்தேன். செம்பனார் கோவில் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தபோது மேற்கண்டவற்றை சொன்னேன்.

குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

S. Naani PC 628

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

12/11/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை